OS.38/2023

நாள். 29.10.2025

வா.சா.1 – கார்த்திகேயன்

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் மற்றும் ரியல் எஸ்டேட். வாதி ஞானசுந்தரியின் குடும்ப உறுப்பனர்கள் பற்றிய விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் தெரியாது. வாதியின் அப்பா பெயர் தெரியும், ஆறுமுகம், அம்மா பெயர் தனலெட்சுமி. வாதியின் அம்மா பெயர் தனலெட்சுமி இல்லை என்றால் ஞாபகமில்லை. வாதியின் பெற்றோர் இறந்துவிட்டார்கள். வாதியின் உடன் பிறந்த சகோதரர் ஒரே நபர், அவர் பெயர் முனியசாமி. முனியசாமிக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் இல்லை. முனியசாமிக்கு 1ம்பிரதிவாதி ராணியுடன் 1982ம் ஆண்டில் இந்து முறைப்படி கமுகூரணியில் வைத்து திருமணம் நடந்தது என்றால் தெரியாது. அந்த திருமணத்தின் பயனாக முனியசாமிக்கும், 1ம் பிரதிவாதி ராணிக்கும் 2ம் பிரதிவாதியான வனிதா கடந்த 28.04.1983ம் ஆண்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து பிறந்துள்ளார் என்றால் தெரியாது. எனக்கு முனியசாமிக்கும், 1ம் பிரதிவாதி ராணிக்கும் திருமணம் நடந்த விவரமும் அவர்களுக்கு 2ம் பிரதிவாதி பிறந்த விவரமும் தெரியும் என்றும், நான் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. முனியசாமி வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். முனியசாமி வெளிநாட்டில் இருக்கும்போது இஸ்லாம் மதத்திற்கு மாறி தனது பெயரை ஆரிபு முத்தலிபு என பெயர் மாற்றிக்கொண்டார் என்றால் தெரியாது. முனியசாமி இஸ்லாம்மதத்திற்கு மாறி பெயர் மாற்றிக்கொண்ட விவரம் தெரியும் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு 1, 2 அயிட்ட சொத்துக்கள் முனியசாமியின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றால் சரிதான். 3, 4 அயிட்ட சொத்துக்கள் முனியசாமிக்கு பூர்வீக பாத்தியமாக கிடைத்த சொத்துக்கள் என்றால் சரிதான். 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை

முனீயசாமியும், அவரது தங்கையான ஞானசௌந்தரியும் கூட்டாக அனுபவித்து வந்ததாக எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முனியசாமி வெளிநாட்டில் இருக்கும்போது இறந்தார் என்றால் சரிதான். முனியசாமி இறந்த பிறகு உடலை எங்கு அடக்கம் செய்தார்கள் என்றால் அவர் வேலை செய்த வெளிநாட்டில். அவ்வாறு வெளிநாட்டில் அடக்கம் செய்யும்போது அவரது மனைவி, மகளான 1, 2 பிரதிவாதிகளிடம் பிரமாண வாக்குமூலம் பெற்றுத்தான் அடக்கம் செய்தார்கள் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் மனைவி மற்றும் மகள் என்ற வாரிசு அடிப்படையில் அவர்களிடம் பிரமாண வாக்குமூலம் பெற்றுத்தான் அடக்கம் செய்தார்கள் என்றும், நான் வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் கொடுத்த பிரமாண வாக்குமூலத்தில் சாட்சியாக என்னுடைய முதல்வரான ஞானசௌந்தரி கையெழுத்து செய்துள்ளார் என்றால் இல்லை. 1, 2 பிரதிவாதிகள் 1, 2 அயிட்ட சொத்துகளை தங்களுக்கு கொடுங்கள் என என்னுடைய முதல்வரான ஞான சௌந்தரியிடம் கேட்டபோதுதான் அவர் எனக்கு பவர் கொடுத்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அதன் பிறகுதான் முனியசாமிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்களையும், பூர்வீக சொத்துக்களையும் சேர்த்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முனியசாமிக்கு என்னுடைய முதல்வரான ஞான சௌந்தரி மட்டும்தான் வாரிசு என்பதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய முதல்வர் ஞானசௌந்தரி முனியசாமியின் வாரிசு இல்லை என்பதால்தான் நான் வாரிசு சான்றிதழ் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய முதல்வர் ஞானசௌந்தரிக்கு திருமணமாகி அவரது குடும்பத்துடன் தனியாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். முனியசாமிக்கு உண்மையான வாரிசுகள் பிரதிவாதிகள் என்றால் சரியல்ல. முனீயசாமி உயிருடன் இருக்கும்போது 2ம் பிரதிவாதியை தங்கராசு என்பவருக்கு திருமணம்செய்து கொடுத்தார் என்றால்

தெரியாது. அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும் என்றும் வழக்கு சொத்துக்களை என்னுடைய முதல்வர் ஞானசௌந்தரி அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாவா வழககை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா 1, 2 அயிட்ட சொத்துகளில் என்னுடைய முதல்வர் ஞானசௌந்தரிக்கு எந்த சட்டவிதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. முனியசாமியின் உண்மையான வாரிசுகள் 1, 2 பிரதிவாதிகள் என்பதால் என்னுடைய முதல்வர் ஞானசௌந்தரிக்கு வழக்கு 1, 2 அயிட்ட சொத்துக்களில் எவ்வித உரிமை இல்லை என்றும், 3, 4 அயிட்ட சொத்துக்களில் மட்டுமே பாதி பங்கு உள்ளது என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.